(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர் )

இல. 74.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2019 யூலை 09 செவ்வாய்க்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

39/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'ரட்டம எளியய் – அந்துர துரலய்' தேசிய மின்சாரம் வழங்கும் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீட்டு அலகுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) தற்போது நாட்டில் மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீட்டு அலகுகளின் எண்ணிக்கை மொத்த வீட்டு அலகுகளின் எண்ணிக்கையின் விகிதாசாரமாக யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

90/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கமத்தொழில், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 ஆண்டில் யாழ் மாவட்டத்தில் உருளைக்கிழங்கு பயிரிடப்பட்ட காணிகளின் பரப்பளவு எவ்வளவு என்பதையும்;

(ii) கடந்த போகத்தில் உருளைக்கிழங்கு பயிரிட்ட விவசாயிகளுக்கு உரிய காலத்தில் விதை உருளைக் கிழங்கு பெற்றுக்கொடுக்கப்பட்டதா என்பதையும்;

(iii) இன்றேல், இதற்கு மாற்றீடாக சின்ன வெங்காயம் செய்கைக்குத் தேவையான விதைகளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) உருளைக்கிழங்கு செய்கைக்கான விதைகளை உரிய காலத்தில் பெற்றுக் கொடுக்க முடியாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும் ;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மாற்றுவழியாக பெற்றுக்கொடுக்கப்பட்ட சின்ன வெங்காயச் செய்கையினால் விவசாயிகளின் வருமான மட்டம் அதிகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும் ;

(ii) இன்றேல், சின்ன வெங்காயம் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், இதற்குரிய காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) பாதிக்கப்பட்ட செய்கைகளுக்கு அரசாங்கத்தினால் நிவாரணம் பெற்றுக்கொடுக்கப்பட்டிருப்பின், அதன் அளவுகள் யாவை என்பதையும் ;

(v) இவ்வாறு நிவாரணம் பெற்றுக்கொடுக்கப்படவில்லையெனில் ஏன் என்பதையும்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

147/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— கமத்தொழில், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மாகாணத்தில் அமைந்துள்ள உள்நாட்டுப் பால்மா தொழிற்சாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந்தத் தொழிற்சாலைகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்,

(iii) நல்லாட்சி அரசு ஆட்சி அதிகாரத்திற்கு வந்ததன் பின்னர் இதுவரை அந்த தொழிற்சாலைகளின் உற்பத்தி அளவு ஒவ்வொரு வருடத்திற்கமைய எவ்வளவென்பதையும்;

(iv) தற்போது ஊவா மாகாணத்தின் உள்நாட்டுப் பால்மா உற்பத்தித் தொழிற்சாலைகள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அமைச்சு எடுக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

209/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2017ஆம் ஆண்டில்,

(i) புகையிரதத்தைப் பயன்படுத்திய பயணிகளின் எண்ணிக்கை;

(ii) பயணிகள் போக்குவரத்தினால் கிடைத்த வருமானம்;

(iii) அச்சிடப்பட்ட புகையிரத பயணச் சீட்டுக்களின் எண்ணிக்கை;

(iv) புகையிரத பயணச் சீட்டுக்களை அச்சிடுவதற்காக செலவிடப்பட்ட தொகை;

யாது என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) பயணிகள் போக்குவரத்திற்காக நாளொன்றில் ஈடுபடுத்த வேண்டிய புகையிரத பயணச் சுற்றுக்களின் எண்ணிக்கை;

(ii) பொதுவாக நாளொன்றில் மேற்கொள்ளப்படும் பயணச் சுற்றுக்களின் எண்ணிக்கை;

யாது என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

247/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) பதுளை மாவட்டத்தின் மகியங்கனை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள அடையாளம் காணப்பட்ட தொல்பொருளியல் இடங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(ii) அப்பிரிவில் அகழ்வுகள் மேற்கொள்ளப்படாத எனினும், அடையாளம் காணப்பட்ட தொல்பொருளியல் இடங்கள் அமைந்துள்ளனவா;

(iii) ஆமெனில், அவை யாவை;

(iv) மேற்படி பிரிவில் அமைந்துள்ள தொல்பொருளியல் முக்கியத்துவம் வாய்ந்த ரஜமகா விகாரைகளின் எண்ணிக்கை எவ்வளவு; அது பற்றிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பாரா;

(v) மேற்படி தொல்பொருளியல் இடங்களின் பேணல் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் பற்றிய முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

347/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதவி பராக்கிரமபுர நகரமானது சனத்தொகை மிகுந்த பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு நகரம் என்பதையும்;

(ii) அந்நகரம் முறைசார்ந்த வகையில் நிர்மாணிக்கப்படவில்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி நகரத்தினை, நகர உருவாக்கக் கருத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்வது பொருத்தமென்பதால் அதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

433/ '19

கௌரவ கனக ஹேரத்,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிவில் விமான சேவை அதிகாரசபை ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(ii) நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(iii) சிவில் விமானச் சேவைகள் அதிகாரசபையின், பணிப்பாளர் நாயகம், மேலதிக பணிப்பாளர் நாயகம், பிரதி பணிப்பாளர் நாயகங்கள் மற்றும் பிரிவுகளின் தலைமைப் பணிப்பாளர்களது வயதெல்லைகள் வெவ்வேறாக யாது;

(iv) இந்த அதிகாரசபையில் உள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களது வயதெல்லைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சிவில் விமானசேவை அதிகாரிகள் ஓய்வுபெறுகையில், வெற்றிடமாகும் குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கு, தகைமை படைத்த இரண்டாம் நிலை உத்தியோகத்தர்கள் குழுவொன்றை ஈடுபடுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

454/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கண்டி மாவட்டத்தின்,

(i) சுற்றுலா பயணிகளை கவர்கின்ற இடங்கள்;

(ii) சுற்றுலா பயணிகளுக்கு தங்குமிட வசதிகள் வழங்குகின்ற நிறுவனங்கள்;

(iii) நட்சத்திரங்களுக்கேற்ப வகைப்படுததப்பட்டுள்ள ஹோட்டல்களின் எண்ணிக்கை பெயர்வாரியாக யாதென்பதையும்;

(iv) ஆங்கில எழுத்துகளின் பிரகாரம் வகைப்படுத்தப்பட்டுள்ள உணவுசாலைகள் பெயர்வாரியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2017 ஆம் ஆண்டில் அமைச்சினால்,

(i) சுற்றுலாத்துறையின் மேம்பாட்டுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள வேலைத் திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) அவற்றுக்காக செலவிடப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்;

(iii) சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அடுத்தாண்டினுள் அதிகமான சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள விசேட திட்டங்கள் யாவை என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

9.

518/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2014.01.01 ஆம் திகதி தொடக்கம் 2015.01.01 ஆம் திகதி வரை இலங்கைப் பிரசைகளால் அரச வங்கிகளிலிருந்து பெறப்பட்டுள்ள மொத்த அடகுக்கடன்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் தங்கநகைகளை அடகுவைத்து பெறப்பட்டுள்ள கடனின் அளவு யாது;

(iii) தங்கநகைகளை அடகுவைத்து ரூபா இரண்டு இலட்சத்தைவிடக் குறைவாக கடன் பெற்றுள்ள பெண்கள் மற்றும் ஆண்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு;

(iv) மேலே (i) இல் குறிப்பிட்ட கடனின் அளவு அக்காலப்பகுதிக்குள் விநியோகித்துள்ள ஒட்டுமொத்த கடனின் சதவீதமாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

571/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 முதல் 2014 ஆம் ஆண்டு வரை மற்றும் 2017 ஆம் ஆண்டு முதல் இன்று வரை இலங்கை வெற்றிலை ஏற்றுமதி மூலம் ஈட்டிக்கொண்டுள்ள வருமானம் யாது என்பதையும்;

(ii) குருநாகல் மாவட்டத்தில் வெற்றிலை பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) எமது பிரதான வெற்றிலைக் கொள்வனவாளரான பாகிஸ்தான் வெற்றிலைக்கு அதிக வரி விதித்துள்ளமை காரணமாக தற்போது விவசாயிகள் வெற்றிலையை விற்பனை செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) இதில் தலையீடு செய்து வெற்றிலை பயிர்ச்செய்கையாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

634/ '18

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018.10.31 ஆம் திகதியில் சமுர்த்தி பயனாளி குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) 2018.10.31 ஆம் திகதியில் சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) 2014.12.30 ஆம் திகதியுடன் ஒப்பிடும் போது 2018.10.31 ஆம் திகதியில் சமுர்த்தி பயனாளிகள் எண்ணிக்கையின் வித்தியாசம் எவ்வளவென்பதையும்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

636/ '18

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அபிவிருத்தி லொத்தர் சபையினால் வெளியிடப்படும் லொத்தர் சீட்டுக்கள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) 2010 தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையில் மேற்படி ஒவ்வொரு லொத்தர் சீட்டு தொடர்பிலும்,

(i) விற்பனையில் கிடைத்த வருமானம் எவ்வளவென்பதையும்;

(ii) விற்பனையில் கிடைத்த வருமானத்தில் வெற்றி பெற்றவர்களுக்காக ஒதுக்கப்படும் தொகை அல்லது மொத்த வருமானத்தின் சதவீதம் எவ்வளவென்பதையும்;

(iii) விற்பனையின் பின்னர் குறைந்த வெற்றித் தொகையிலிருந்து அதிகூடிய வெற்றித்தொகை வரை வெற்றியாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) வெற்றிக்குரிய லொத்தர் சீட்டு விற்பனை செய்யப்படாமை அல்லது விற்பனை செய்யப்பட்ட வெற்றிக்குரிய லொத்தர் சீட்டு உரிமையாளர் வெற்றியைப் பெற முன்வராமையினால் ஆண்டுதோறும் அரசாங்கத்திற்கு எஞ்சிய தொகை எவ்வளவென்பதையும்;

ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

13.

757/ '19

கௌரவ ரொஷான் ரணசிங்க,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2019.01.01 தொடக்கம் 2019.01.31 வரையான காலத்தில் வரையறுக்கப்பட்ட GSMB — தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) கம்பனியினூடாக மனம்பிட்டி மணல் அகழ்வு துறையினால் விநியோகிக்கப்பட்ட மணல் கியூப்களின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) GSMB கம்பனியின் ஊடாக நாளாந்தம் மணல் விநியோகிக்கும் முன்னுரிமை (டோக்கன் வழங்குதல்) எவ்வாறு வழங்கப்படுகிறது என்பதையும்;

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) GSMB கம்பனி மூலமாக மனம்பிட்டி மணல் அகழ்வு துறை சார்பில் நாளாந்தம் மற்றும் மாதாந்தம் கிடைக்கும் அரசிற்கான வருமானம் எவ்வளவென்பதையும்;

(ii) 2013 தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையில் GSMB கம்பனி மூலமாக அரசாங்கத்திற்கு கிடைத்த மொத்த வருமானம் ஒவ்வொரு ஆண்டின் படி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி தொகை வைப்பிலிடப்பட்ட கணக்கு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

14.

816/ '19

கௌரவ ரீ ரஞ்சித் டீ சொய்சா,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1984 ஆம் ஆண்டிலிருந்து 2016/2017 பெரும் போகம் வரை அம்பாறை மாவட்டத்துக்குரிய லாஹுகல பிரதேச செயலகப் பிரிவின், பாணம தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள பயிரிடப்பட்ட காணிகளில் பயிரிடும் நடவடிக்கைகளை லாஹுகல வனப் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர்கள் இடைநிறுத்தியுள்ளார்கள் என்பதை அறிவாரா?

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) இவ்விடயம் தொடர்பில் உத்தரவு பிறப்பித்த உத்தியோகத்தர் யார் என்பதையும்;

(iv) அக் காணிகளில் மீளப் பயிரிடுவதற்கு விவசாயிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

948/ '19

கௌரவ முஹம்மது நசீர்,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி பிரதான புகையிரத நிலையத்திலிருந்து மாத்தறையை நோக்கி அமைந்துள்ள கரையோர புகையிரத வீதி இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி நவீனமயப்படுத்தலின்போது காலி தலாப்பிட்டிய, பண்டாரநாயக்க பிளேஸ் மற்றும் தக்கியா ஒழுங்கைக்கு இடையில் புகையிரத வீதி ஒதுக்கத்தின் எல்லைக்கு அருகிலுள்ள வீடுகளுக்கும் காணிகளுக்கும் செல்வதற்கான ஒரேயொரு பிரவேச வீதி புகையிரத வீதியால் முழுமையாக மூடப்பட்டு நடைபாதையாக மாறியுள்ளதால், அங்குள்ள குடியிருப்பாளர் களுக்கு போக்குவரத்துச் செய்வதற்குத் தகுந்த பிரவேச வீதி இல்லாத நிலை உருவாகி உள்ளதென்பதையும் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இந்த குடியிருப்பாளர்களின் அடிப்படைத் தேவையாகக் காணப்படும் பாதுகாப்பான பிரவேச வீதியொன்றை அமைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது
## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

அமைச்சரவை அந்தஸ்த்தற்ற தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்,— ஸ்ரம வாசனா நிதியம் (திருத்தம்),— 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, ஸ்ரம வாசனா நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

2.

அமைச்சரவை அந்தஸ்த்தற்ற தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்,— சம்பளச் சபைகள் (திருத்தம்),— சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள்,— 8 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், 2019 யூலை 10 ஆம் திகதி புதன்கிழமை மற்றும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை ஆகிய தினங்களில் சபை அமர்வு நேரங்கள் மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 6.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள்,— 2019 சனவரி 24 ஆம் திகதி பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினால் தடைபெறாமல் 2019 யூலை 08 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு,

- கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவானது, “கமத்தொழில், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு” எனவும்; மற்றும்
- பொது நிருவாகம் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவானது, “பொது நிருவாகம், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு”

எனவும் மீளப் பெயரிடப்படுமாக.

5.

கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

“இலங்கை பிளாஸ்ரிக் மற்றும் இறப்பர் நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்”

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை — செலவினத் தலைப்பு 117 — நிகழ்ச்சித்திட்டம் 02,— †2019 சனவரி 01 ஆம் திகதியில் ஆரம்பித்து 2019 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் நிதியாண்டின் சேவைகளுக்காக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது பிற வேறேதேனும் நிதியம் ஒன்றிலிலிருந்து அல்லது அதன் கையிருப்பிலுள்ள பணத்தொகையிலிருந்து அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினால் பெறப்பட்ட கடன் தொகையிலிருந்து ரூபா அறுபத்து ஐயாயிரம் மில்லியனை (ரூபா 65,000 மில்லியன்) விஞ்சாத குறைநிரப்புத் தொகையொன்று பின்வரும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு செலவிடப்படுமாக:-

**அட்டவணை**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **தலைப்பு** | **- 117** | **நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு** | | | |
| **நிகழ்ச்சித்திட்டம்** | **- 02** | **அபிவிருத்திச் செயற்பாடுகள்** | | | |
| | | | | | **இ. ரூ. மில்லியன்** |
| | | மீண்டெழும் செலவினம் | | | - |
| | | மூலதனச் செலவினம் | ரூ. | | 65,000 |
| | | **மொத்தச் செலவினம்** | **ரூ.** | | **65,000** |
| **கருத்திட்டம்** | **03** | **கடுகதிப் பாதைகள் அபிவிருத்தி** | | | **57,131** |
| | | வெளிநாட்டுக் கடன்கள் (நிதியியல் குறியீடு 12) | | 55,818 | |
| | | உள்நாட்டு கூட்டு நிதியளித்தலுடன் சம்பந்தப்பட்ட வெளிநாட்டு நிதி (நிதியியல் குறியீடு 18) | | 1,313 | |
| | **04** | **நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி** | | | **6,044** |
| | | வெளிநாட்டுக் கடன்கள் (நிதியியல் குறியீடு 12) | | 5,564 | |
| | | வெளிநாட்டு நிதி சம்பந்தப்பட்ட செலவு (நிதியியல் குறியீடு 17) | | 480 | |
| | **05** | **வீதிகளை அகலப்படுத்தல், மேம்படுத்தல்** | | | **500** |
| | | உள்நாட்டு நிதிகள் (நிதியியல் குறியீடு 11) | | 500 | |
| | **06** | **பாலங்கள் மற்றும் மேம்பாலங்களை நிர்மாணித்தல்** | | | **225** |
| | | வெளிநாட்டு நிதி சம்பந்தப்பட்ட செலவு (நிதியியல் குறியீடு 17) | | 225 | |
| | **07** | **இயற்கை அனர்த்தத்தினால் பாதிப்படைந்த வீதியை புனரமைத்தல்** | | | |
| | | வெளிநாட்டுக் கடன்கள் (நிதியியல் குறியீடு 12) | | 1,100 | 1,100 |
| | | | | | 65,000 |

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2019 யூன் 20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க.1 முதல் 31 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 287,939,000,000 ஆகும்.

* 2.

நிதி அமைச்சர்,— தீவிர பொறுப்பு முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 2018 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க தீவிர பொறுப்பு முகாமைத்துவச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு அத்தகைய நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதற்கு இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் கடன் என்ற வகையில் ரூபா 480.0 பில்லியனை விஞ்சாத தொகையொன்றினை பெற்றுக்கொள்வதற்கு இப்பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பாக நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 5 ஆம் திகதிய 2113/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.06.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பாக நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 13 ஆம் திகதிய 2114/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.06.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பாக நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 14 ஆம் திகதிய 2114/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.06.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.4),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பாக நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மே 13 ஆம் திகதிய 2123/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.06.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

அரச காணி (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்  — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிருவாக மாவட்டங்கள் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1955 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, நிருவாக மாவட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ்:-

(அ) 1955 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, நிருவாக மாவட்டங்கள் சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட கொழும்பு நிருவாக மாவட்டத்தின் அதிகார இடப்பரப்பும் எல்லைகளும், கொழும்பு நிருவாக மாவட்டத்தின் அதிகார இடப்பரப்பினுள்ளும், எல்லைகளினுள்ளும், இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட "கொழும்புத் துறைமுக நகரம்" என அறியப்படும் மீட்டெடுக்கப்பட்ட காணி இடப்பரப்பை உள்ளடக்குவதன் மூலம் மாற்றியமைக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அத்தகைய மீட்டெடுக்கப்பட்ட காணி இடப்பரப்பு கொழும்பு நிருவாக மாவட்டத்தில் கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவுடன் இணைக்கப்படுதல் வேண்டுமெனவும்

இப்பாராளுமன்றம் இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

பின்வரும் தொடுப்புப் புள்ளிகளில் மேல் மாகாணத்தில், கொழும்பில் அமைந்துள்ளதும் பரப்பளவில் 446.6153 ஹெக்டயர்களைக் கொண்டுள்ளதும் நில அளவையாளர் தலைமையதிபதியினால் தயாரிக்கப்பட்ட 2019.06.11 ஆம் திகதிய CO/DSO/2019/370 ஆம் இலக்கப் படியெடுப்பில் குறித்துக் காட்டப்பட்டதும், "கொழும்புத் துறைமுக நகரம்" எனவழைக்கப்பட்டு அறியப்படுவதும் காணித்துண்டுகள் 2 முதல் 7 வரையாக அடையாளமிடப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; அக்காணித்துண்டின் எல்லைகள் பின்வருமாறு:-

| தொடுப்புப் புள்ளி - கொழும்பு மாவட்டம், கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவின் மேற்கெல்லை | கிழக்கு ஆயத்தொலை | வடக்கு ஆயத்தொலை |
|---|---|---|
| வடக்குத் தொடுப்புப் புள்ளி | 396913.476 | 492847.764 |
| தெற்குத் தொடுப்புப் புள்ளி | 397077.037 | 492290.222 |

(குறிப்பீட்டு ஆயத்தொலை முறைமை: இலங்கைக் கட்டுப்பாட்டு வலை 1999)

1. **காணித் துண்டு இல. 2 : பரப்பளவு: 155.8376 ஹெக்.**

வடக்கில் - காணித்துண்டங்கள் இல. 6 மற்றும் 1, கொழும்புத் துறைமுகம் அத்துடன் சைத்திய வீதி

கிழக்கில் - காணித்துண்டம் இல.1, கொழும்புத் துறைமுகம், சைத்திய வீதி, இந்து சமுத்திரம் மற்றும் காணித்துண்டு இல. 7

தெற்கில் - இந்து சமுத்திரம், காணித்துண்டங்கள் இல. 7, 6 மற்றும் 3

மேற்கில் - காணித்துண்டங்கள் இல. 6, 3 மற்றும் 6

2. **காணித் துண்டு இல. 3 : பரப்பளவு : 15.0933 ஹெக்.**

வடக்கில் - காணித்துண்டம் இல. 2

கிழக்கில் - காணித்துண்டங்கள் இல. 2 மற்றும் 6

தெற்கில் - காணித்துண்டங்கள் இல. 6 மற்றும் 4

மேற்கில் - காணித்துண்டங்கள் இல. 4 மற்றும் 6

3. **காணித் துண்டு இல. 4 : பரப்பளவு : 113.5311 ஹெக்.**

வடக்கில் - காணித்துண்டங்கள் இல. 6 மற்றும் 3

கிழக்கில் - காணித்துண்டங்கள் இல. 3 மற்றும் 6

தெற்கில் - காணித்துண்டங்கள் இல. 6, 5 மற்றும் 6

மேற்கில் - காணித்துண்டங்கள் இல. 6, 5 மற்றும் 6

4. **காணித் துண்டு இல. 5 : பரப்பளவு : 14.7856 ஹெக்.**

வடக்கில் - காணித்துண்டங்கள் இல. 6 மற்றும் 4

கிழக்கில் - காணித்துண்டங்கள் இல. 6 மற்றும் 4

தெற்கில் - காணித்துண்டம் இல. 6

மேற்கில் - காணித்துண்டம் இல. 6

5. **காணித் துண்டு இல. 6: பரப்பளவு : 101.1038 ஹெக்.**

வடக்கில் - காணித்துண்டங்கள் இல. 7, 1, 2, 3, 4, 5, 4, 3 மற்றும் 2

கிழக்கில் - காணித்துண்டங்கள் இல. 1, 2, 3, 4, 5, 2 மற்றும் 7

தெற்கில் - காணித்துண்டங்கள் இல. 2 மற்றும் 7

மேற்கில் - காணித்துண்டங்கள் இல. 2 மற்றும் 7

6. **காணித் துண்டு இல. 7 : பரப்பளவு : 46.2639 ஹெக்.**

வடக்கில் - இந்து சமுத்திரம், காணித்துண்டங்கள் இல. 1, 6 மற்றும் 2

கிழக்கில் - காணித்துண்டங்கள் இல. 1, 6 மற்றும் 2 அத்துடன் இந்து சமுத்திரம்

தெற்கில் - இந்து சமுத்திரம்

மேற்கில் - இந்து சமுத்திரம்

* 9.

அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1) ,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (2) ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில், அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 05 ஆம் திகதிய 2113/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.06.27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2) ,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில், அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 05 ஆம் திகதிய 2113/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.06.27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

மக்கள் வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையை பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமூலம் — குழு ஆய்நிலை.

* 13.

இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலைய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

பிணையங்கள் பரிவர்த்தனை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

கம்பெனிகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 19.

அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— பாராளுமன்றத்தில் ஆகக்கூடுதலான ஆசனங்களைப் பெற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியினால் தேசிய அரசாங்கமொன்று நிறுவப்பட்டுள்ளதால், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 46 (4) உறுப்புரையின் பிரகாரம் அமைச்சரவை அமைச்சர்களினது எண்ணிக்கை 48 ஐ விட விஞ்சாதவாறு இருத்தல் வேண்டுமெனவும், அமைச்சரவை உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்களினதும் பிரதி அமைச்சர்களினதும் எண்ணிக்கை 45 ஐ விட விஞ்சாதவாறு இருத்தல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

* 20.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.1),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 25 ஆம் பிரிவின் கீழ், மதுவரி தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 சனவரி 18 ஆம் திகதிய 2054/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 04/2018)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 21.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.2),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வருடாந்த மதுபான உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2017 திசெம்பர் 11 ஆம் திகதிய 2049/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 1004)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 22.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) உறுப்புரையின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டு 2017 திசெம்பர் 04 ஆம் திகதிய 2048/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 23.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— “இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 24.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 25.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.).

26.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

மொணறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

லசாலியன் சமூக கல்விச் சேவைகள் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

சர்வதேச பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

ஆலோகா சமூக சேவை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

த இன்ஸ்டிட்யுட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் அக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

ஸ்ரீ சாக்கியசிங்காராம விகாரஸ்த கார்யசாதக சங்விதான (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

இலங்கை கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

டாக்டர். எஸ்.எஸ். குணவர்தன சுதேச ஆயுர்வேத அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

மோகன் லங்கா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

சாயா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.